அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் உடையார்பாளையம் பகுதி என்பது, பெரம்பலூர் பகுதியைச் சார்ந்த பகுதி, பின்தங்கிய மற்றும் ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதி. குறிப்பாக, அந்தப் பகுதியிலே திடீர் திடீரென்று பல வன்முறைக் கும்பல்களால் கலவரம் வருகிறபோது, அந்தப் பகுதியில் பயிலுகின்ற மாணவ மாணவிகள் மாலைகளிலே வீடு திரும்ப சிரமத்திற்குள்ளாக்கப்பட்டு, நாங்கள் எல்லாம் அந்தப் பகுதி காவல் துறையின் உதவியுடன் அவர்களையெல்லாம் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டுக்கொண்டு இருக்கிறோம். எனவே மாணவர்களுக்கு என்று தனியாக விடுதி இப்போது திறப்பதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், அந்தப் பகுதி பெண் குழந்தைகளுக்காவது தனியாக மாணவியர் விடுதியை உடையார்பாளையம் தாலுக்காவில் திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் மாணவர் விடுதி திறப்பது குறித்தது மூலக்கேள்வி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதிதிராவிட மக்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கேட்கிறார்கள். எனவே, அதுசம்பந்தமாகக் கவனிக்க ஆதிதிராவிடர் நலத்துறை இருக்கிறது. இருந்தபோதிலும், பிற்பட்டோர் நலத்துறையைப் பொறுத்தவரையில், புதிதாக பிற்படுத்தப்பட்டோருக்கு விடுதிகள் திறக்கப்படுகின்றன. தமிழகத்தில் இப்போது 820 விடுதிகள் செயல்படுகின்றன. அவற்றில் பிற்படுத்தப்பட்டோருக்கு 444-ம், மிகப்பிற்பட்டோருக்கு 261-ம், சீர்மரபினருக்கு 115-ம் உள்ளன. ஆக ஒட்டுமொத்தமாக இந்த விடுதிகளில் மாணவர்கள் அதிகமாகத் தங்கிப் படிக்கிற காரணத்தால், இனி திறக்கப்படுகிற புதிய விடுதிகள் மாணவிகள் தங்கிப் படிக்கிற விடுதிகளாக இருக்கவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில், புதிதாக இப்போது மாணவியர் விடுதிகள் திறக்கப்படுகின்றன. கல்லூரி விடுதிகளைப் பொறுத்தவரையில் 82 விடுதிகளில் 57 மாணவர்களுக்கும் 25 விடுதிகள் மாணவியருக்கும்